DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 47/2023 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | டாக்டர்.சரவணமுத்து |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.09.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் எலும்பு முறிவு மற்றும் விபத்து சிகிச்சை பிரிவில் மருத்துவ நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.10.2022 அன்று திருமதி.நதியாராணி வயது 35 என்பவர் சாலை விபத்தில் காயம்பட்டு முதலில் காரைக்குடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைப்பெற்று மேல் சிகிச்சைக்காக எங்களது மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டார். அவருக்கு தேவையான நுண்கதிர்படம் மற்றும் இரத்த பரிசோதனைகள் செய்து பார்த்தோம், அதில் அவருக்கு வலது தொடையில் உள்ள பீமர் எலும்பு முறிவு, வலது கால் பகுதியில் உள்ள இரண்டு எலும்புகளும் முறிந்திருந்தன. மேலும், வலது முன்கையில் உள்ள இரண்டு எலும்பு முறிவும் இருந்தது. வலது பாதத்தில் கியுபாய்டு எலும்பும் நான்கு மற்றும் ஐந்தாவது மெட்டாடாசல் எலும்பும் முறிந்து இருந்தது. வலது பாதப் பெருவிரல் பெரும்பகுதி சிதைந்து இருந்தது. இடது காலில் ஐந்தாவது மெட்டாடாசல் எலும்பு முறிந்து இருந்தது. அவருக்கு

31.10.2022 அன்று எலும்பு முறிவிற்கு தேவையான கம்பி மற்றும் தகடு பொறுத்தப்பட்டன. வலது பாதத்தின் பெருவிரல் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. அவர் தொடர் சிகிச்சைக்கு எங்களுடைய வெளி நோயாளிகள் பிரிவிற்கு வந்து கொண்டிருந்தார். கடந்த 11.07.2024 அன்று அவருக்கு வலது தொடை மற்றும் காலில் இருந்த உலோகப்பகுதிகளில் கிருமி தொற்று இருந்ததாலும், வலது முழங்கால் மற்றும் இடுப்பு மூட்டுப்பகுதியில் வலி இருந்ததால் அந்த எலும்புகளில் இருந்த உலோகப்பகுதிகள் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன. இறுதியாக 27.08.2024 சிகிச்சைக்கு வந்தபோது அவருக்கு நீண்ட தூரம் நடந்து செல்வதில் வலி உள்ளதாக கூறினார், பிறகு சமனமிட்டு அமருவதிலும் இயலாமை உள்ளதாக கூறினார். அதே நிலைமை தொடர வாய்ப்பு உள்ளது. **அவர் எங்கள் மருத்துவ மனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட காலகட்டத்தில் செலுத்திய பில் தொகை மொத்தமாக ஒருங்கிணைத்து என்னால் எடுத்துவரப்பட்டுள்ளது. அந்த மொத்த பில் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1.நான் சொல்லியுள்ள மனுதாரருக்கு நீண்ட தூரம் நடந்து செல்வதில் வலி உள்ளதாக கூறினார், பிறகு சமனமிட்டு அமருவதிலும் இயலாமை உள்ளதாக கூறினார். அவருக்கு அசைவு குறைபாடு உள்ளது. பொதுவாக குறைபாடு உள்ளவர்கள் வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்ல மருத்து சான்றிதழ் பெற்று தான் செல்ல முடியும் என்று சொன்னால் அவர் நிர்வாக விதிகளுக்கு உட்பட்டு பணிசெய்ய அனுமதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. 2024 ஆகஸ்டுக்கு பிறகு எங்கள் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை எடுக்க வரவில்லை என்றால் வரவில்லை. அவர் ஆகஸ்டு மாதம் எங்களிடம் சிகிச்சைக்கு வந்த போது அவருக்கு மீண்டும் ஏதாவது தொந்தரவு இருந்தால் மீண்டும் சிகிச்சைக்கு வர வேண்டும் என்று அறிவுறுத்தினோமா என்றால் அறிவுறித்தினோம். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிட்டதா என்றால் எலும்பு முறிவு மட்டும் சரியாகிவிட்டது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.